297

ஓம்:

சேந்திலாண்டவன் துணை.

2 - OCT 1939

ஸ்ரீ

# கண்ணப்பன்

— ஓர் —

## பக்தி நிறைந்த தமிழ் நாடகம்

நாடக நூலாசிரியரும், அமெச்சூர் நடிகருமாகிய

தஞ்சை

N. விசுவநாத ஐயர்

இயற்றியது.

இந்நூலாசிரியர் இயற்றிய இதர தமிழ் நாடகங்கள்:—

"ராஜசேகரன் அல்லது மூன்று தேசப்ரஷ்டர்கள்,

வீரஸிம்ஹன் அல்லது மெய்க்காதலின் இரகசியம்,

ஸ்ரீ ராமதாஸ் அல்லது பக்தியே பரமானந்தம்,

அப்பூதி அடிகள், மாத்ரு பக்தி அல்லது

வீரஹநுமான்" முதலியன.

பதிப்பகம்

தஞ்சை "ஸ்ரீ ஷண்முக அச்சுக்கூடம்"

1935

காபிரைட் ரெஜிஸ்டர்டு ] [ விலை அணா எட்டு.

314

ஸ்ரீ:

தேவி மீனாட்சியின் திருவடி நிழல் எய்திய

**என் தாய்**

R. நாகசுப்பு அம்மைக்கும்,

சிவகதியடைந்த

**என் தந்தை**

இராவ்சாஹிப்

R. நாராயணஸ்வாமி அய்யர்

(பீ. ஏ., ரிட்டையர்டு டெப்டி கலெக்டர்) அவர்களுக்கும்,

**இச்சிறிய நூலை**

பக்தியுடனும் பணிவுடனும் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் தத் ஸத்.

உ

சேந்திலாண்டவன் துணை.

# முன்னுரை.

சிவபக்தியிற் சிறந்த அடியார்கள் நாயன்மார் எனப் படுவர். அவர்கள் அறுபத்து மூவர் ஆவர். அவர்களில் ஒருவர் நம் திண்ணனார். வேட்டுவ மன்னனின் குமரனாகிய இவர், வேட்டைக்குச் சென்றிருந்தபொழுது ஸ்ரீ காளத்தி மலையில் திருக் கோயில் கொண்டு விளங்கும் குடுமித்தேவரைக் கண்டு அவர்மீது அன்பு நிறைந்து, தன்னையும் மறந்து, திருத்தொண்டிலே மனங் கரைந்து நிற்கும் நாளையில், ஈசனார் அவரை ஆட்கொள்ள நினைந்து, தம் விழிகளில் குருதியைச் சொரிந்து காட்டத், திண்ணனார் ஊனுக்கு ஊனிட நினைந்து முதன் முதல் தம் ஒரு கண்ணினைப் பெயர்த்து அப்பி, பின்னர் மற்றொரு கண்ணையும் பெயர்க்கும் சமயம், கருணையங்கடலாகிய காளத்திநாதன் அச் செய்கைக்கு மனம் பொறாராகி "நில்லு கண்ணப்ப" என அருளித் தம் திருக் கரத்தால் தடுத்து ஆட்கொண்டார்.

இச்சிறிய சரிதையை, மாணவர்கட்கும், நாடக அன்பர் கட்கும், பயன்படும் முறையில், என் சிற்றறிவுக் கெட்டியவரை எழுதியுள்ளேன். குறையுளதேல் திருத்திக் கொள்ளுமாறு அன்பர்களை வேண்டுகின்றேன்.

இந்நாடகத்தையாவது எனது ஏனைய நாடகங்களை யாவது நடிக்க விரும்புவோர் ஒவ்வொரு முறையும் எனக்கு எழுதி, நான் விரும்பும் "ஆசிரியர் கட்டணத்தை (Royalty) முன் செலுத்தி உத்தரவுபெற்ற பின்னரே நடித்தல் வேண்டும் என்பதையும், இல்லையேல் எனது 'நூல் உரிமை (Copy Right) பாத்தியங்களை மீறிய குற்றத்திற்குள்ளாக நேரிடும் என்பதையும் அறியுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*ஸ்ரீ ஸ்கந்த பவனம்,* **N.** *விசுவநாதன்*

*தெற்கு அலங்கம், தஞ்சாவூர்.* 21-12-1935.

## நாடக உறுப்பினர்கள்.

| | | |
|---|---|---|
| குடுமித்தேவர் | ... | — ஸ்ரீ காளத்தி மலையில் விளங்கும் ஈசன். |
| நாகன் | ... | — உடுப்பூர் அரசன். |
| நாணன் | ... | நாகனின் அமைச்சர்கள். |
| காடன் | ... | |
| திண்ணன் (கண்ணப்பன்) | | — நாகனின் தவச்செல்வன். |
| சிவகோசரியார் | ... | — ஸ்ரீ காளத்தி ஈசனின் அருச்சகர். |
| கந்தன் | ... | நாகனின் பிரதம வேடுவர்கள். |
| கடம்பன் | ... | |
| குகன் | ... | |
| இடும்பன் | ... | |
| தத்தை | ... | — நாகனின் மனைவி. |

இன்னும் :- காவலர்கள், வேடுவர்கள், முதலானோர்.

**நாடகம் நிகழ்விடம் :-**

உடுப்பூரிலும், அதைச்சார்ந்த வனத்திலும், ஸ்ரீ காளத்தி மலையிலுமாம்.

உ

சேந்திலாண்டவன் துணை.

# கண்ணப்பன்.

## களம் 1.

இடம்:— உடுப்பூர் அடவியில் உள்ள ஓர் மேடு.

காலம்:— முற்பகல்.

நடர்:— கந்தன், கடம்பன், குகன், இடும்பன், நாணன், காடன், நாகன், திண்ணன் முதலானோர்.

[ கந்தன், கடம்பன், குகன், இடும்பன் முதலிய வேடுவர்கள் மேடையின்கீழ் வீற்றிருக்க, நாணன் யோசனையுடன் நிற்கின்றான். ]

நாண. என்ன ஆச்சரியம்! இன்னும் நமது நாக இராஜனைக் காணோம். ஒருநாளும் நம்மை இந்நேரம் காக்கவைத்த தில்லையே........ஆ! அதோ வருகின்றான் நமது நண்பன் காடன். அவனை விசாரித்தால் உண்மை விளங்கும் (காடன் பிரவேசித்தல்) காடா! உனக்கு ஏன் இவ்வளவு நேரம். அதிகாலையிலேயே நம் அரசர் அகத்திற்கு ஏகினையே?

காட. நாண! சற்றுமுன்பாக அவ்விடத்தில் ஓர் திடுக்கிடும்படியான சம்பவம் நேரிட்டதனால் இங்குவரத் தாமதப்பட்டது.

நாண. (எழுந்து அருகில்வந்து) ஆ! என்ன சம்பவம். அரசர் வீட்டில் யாவரும் க்ஷேமந்தானே?

காட. க்ஷேமந்தான்.

நாண. சந்தோஷம். ஆமாம். அரசர் கிரகத்தில் நேர்ந்த சம்பவமென்ன.

காட. நண்பர்களே! நமது இளவரசரான திண்ணனார் புதர்களுக்கிடையே ஒரு புலிக்குட்டியுடன் விளையாடிக்கொண்டிருந்தனராம். அச்சமயம், அதன் தாய் திடீரென அங்கு தோன்றி இளவரசரை வெருட்ட, அவர் அதன்மீது பாணங்களைப் பொழிந்துகொண்டே வெகு தூரம் ஓடினராம்.

நாண. பின்னர்!

காட. எதிர்பாராத இச்சம்பவத்தை அருகிலிருந்து அறிந்த நமது அரசர் தம் அரும்புதல்வனைச் சடுதியில் காக்க எண்ணி, அக்கொடும் வரிப்புலியைப் பின்தொடர்ந்து அநேகபாணங்களை எய்தும் பயன்பட வில்லையாம்.

நாண. அந்தோ! நம் இளவரசர் கதி என்ன ஆயிற்று!

காட. வருந்தவேண்டாம். அவரும் க்ஷேமமாக இருக்கின்றார்.

நாண. நண்பா! இளவரசர் எவ்விதம் தப்பித்தார். சீக்கிரமே சொல்.

காட. தன்னைவேறு ஒருவர் பின்பற்றி வருவதை அறிந்த அவ்வேங்கை கோபத்துடன் நமது அரசர்மேல் பாய்ந்ததாம்.

நாண. ஐயோ! பின்னர்.

காட. பின்னரென்ன! திண்ணனார் அதே சமயத்தில் அதி சாமர்த்தியத்துடன் ஒரு அம்பெய்ய, அது அக்கொடிய விலங்கின் வயிற்றைக் கிழித்துச் சென்றதாம்.

நாண. பேஷ்! பேஷ்! நணபர்களே! திண்ணனாரை சாமான்ய பிறப்பு என நாம் கருதலாகாது. சிறந்த வில்லாளியாகிய அவ்விஜயனே நம் நம்வேடுவகுலத்தில் தோன்றி யிருக்க வேண்டும்.

காட. ஆம்! ஆம்! எல்லாம் நமது குறிஞ்சி நிலக்கடவுளாகிய செவ்வேளின் அருளன்றோ.

நாண. சந்தேகமென்ன! அவர் கிருபையினாலன்றோ அவதரித்தார் நம் திண்ணனார் .... ஆமாம். காடா! நமது அரசர் பெருமான் நம் சபைக்கு வர இன்னும் நேரமாகுமோ?

காட. சீக்கிரம் வந்துவிடுவார் என்றே நினைக்கின்றேன். நமது தேவராட்டி தத்தை திண்ணனாருக்கு திருஷ்டி கழித்துக் கொண்டிருக்கிறார். ஒருக்கால் அதைப்பார்த்து வருகின்றாரோ என்னமோ அறியேன் .... நாணா .... ஸ் .... அதோ நம் அரசர் வருகின்றார்.

( **நாகன்** பிரவேசிக்க யாவரும் வணங்கல். அரசர் தமக்குற்ற மேடையில் அமர்கிறார். )

நாண. அரசே! எமது இளவரசருக்கும் தமக்கும் நேர்ந்த ஆபத்திலிருந்து தாங்கள் இருவரும் தப்பித்ததை அறிந்து உளமகிழ்ந்தோம்.

நாக. ஓகோ! நாம் வருவதற்குமுன் எல்லாவிஷயங்களையும் அறிந்துகொண்டீர்களோ! சந்தோஷம்........அன்பர்களே! உங்களுக்கு முக்கியமான விஷயம் ஒன்று சொல்ல நாம் நினைக்கின்றோம். நண்பர்களே! நம் புதல்வனின் பெருமையை நாம் சிறப்பித்து கூறுகின்றோம் என நீங்கள் கருதலாகாது. நன்கு ஆராயுங்கால் அவன் அடைந்திருக்கும் வில், வாள், படைக்கலப்பயிற்சி முதலியனபோல் வேறு எவரும் இவ்வுலகில் அடைந்திரார் என்பது நமது

துணிபாம். ஒரு வேங்கையின் வயிற்றிற்குள் பாய்ந்து வெளிப்பட்டு தரையினுள்ளும் பதிந்துவிடும் படியான ஒரு அம்பை எய்த நம் மைந்தனின் புஜபல பராக்கிரமத்தை யாம் எவ்வாறு புகழுவல்லோம்.

நாண. எம்பெருமானே! கார்த்திகேயனுக்குத்தாம் அந்நாளில் செய்த பூஜையின் பலனால் அவதரித்த பாலனன்றோ அவர். அப்படியிருக்க, ஏன் அவரிடத்தில் வீர இலக்ஷ்மியின் அருள் இராது.

நாக. உங்கள் அன்பு நீடூழி வாழ்க! ஐயன்மீர் மற்றொரு முக்கியமான விஷயம். இதுகாறும் உங்களுக்குத் தலைமை பூண்டு, நம்மை அடிமைகொண்ட சேவல்கொடியோன் பேரருளினால் உங்களை ஆண்டுவந்தோம். இப்பொழுது நமக்கு முதுமைப் பருவம் முதிர்ந்துவிட்டது. இனி இந்நாட்டை ஆளவோ, அல்லது காட்டையடைந்து வேட்டையாடவோ வலிவுஇல்லோம். ஆதலின் பருவம் நிரம்பிய அருமைத் திண்ணனுக்கே சகல வித உரிமைகளையும் இன்றே அளித்திட எண்ணுகின்றோம். இவ்விஷயமாக, நம் மனைவி தத்தையிடம் பேசியபொழுது, அவளும் நம் எண்ணப்படி நடத்தலே தக்கது எனத்தெரிவித்து உளம் களித்தாள். இனி உங்களுடைய அபிப்பிராயத்தையும் இப்பொழுது அறிய நாம் ஆவல் கொண்டுள்ளோம். யாது தெரிவிக்கின்றீர்கள்?

காட. தலைவரே! திண்ணனுடைய அருமை பெருமைகளை நாம் நன்கு அறிவோம். அவரோ சத்தியசந்தர். வில் வித்தையில் அவருக்கு நிகரானவர் எவ்விடத்தும் எவரும் இல்லை. ஆதலின் தக்கபருவம் அடைந்த அவரை நாங்களும் எங்கள் சந்ததியாரும் தலைவராக ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கின்றோம். **(யாவரும்)** திண்ணனார் நீடூழி வாழ்க!

நாக. மெத்தசந்தோஷம். நாணா! உடனே சென்று நம் அரும்புதல்வனை இங்கு அழைத்துவா.

(நாணன் செல்லல் நாகன் வில், அம்பறாத் தூணி, வாள் முதலியனவற்றை தன்னிடமிருந்து நீக்கி வைத்திருக்க, திண்ணன் புன்முறுவலுடன் பிரவேசித்தல்)

திண். அண்ணா! (நமஸ்கரித்தல்) உத்திரவுப்படி வந்தேன். நான் இனிச் செய்யவேண்டுவதை அறியலாமோ!

நாக. (அருகில் அமரவைத்த பின்) குழந்தாய்! உன்னுடைய பராக்கிரமத்தைக் கண்டு நாம் மகிழ்வடைந்தோம். ஆயினும் இன்று நீ அவ்வரிப்புலியினிடமிருந்து தப்பியது செவ்வேளினருள் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அதிருக்கட்டும். என் ஐயனே! இன்று உன்னை இந்நாட்டின் தலைவனாக்கக் கருதியுள்ளேன். உனது எண்ணம் எப்படி?

திண். "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" எனப்பெரியார் அருளியபடி, நான் தங்களுடைய சித்தப்படி நடந்து கொள்ளக் காத்திருக்கின்றேன். ஆயினும் தந்தாய்! என் இஷ்டப்படி சிலநாள் வனவேட்டையாடி வந்து பின் இப்பதவியை ஏற்றுக்கொண்டால் என்ன?

நாக. அப்பா! வேட்டையாடுதல்தான் நம் குலவழக்கமாயிற்றே! இன்று என்பதவியை ஏற்றுக்கொண்ட உடன் நீ வேட்டையாடி வரலாம்.

திண். சரி! அவ்விதமே நடக்கின்றேன்.

நாக. நன்று!

"வெற்றிவேள் தந்த எங்கள் வேட்டுவக்குல விளக்கே
இற்றை நாள் முதலாநீயே இறவுளர்க்கிறைவனாகிப்
பற்றலர் முனைமுருக்கிப் பகைப்புலங் கவர்ந்து கொற்றம்
பெற்றுமா வேட்டையாடிப் பெரிது வாழ்ந்திருத்தி நன்றே"

நம் குலவிளக்கே! இன்று முதலாக நீயே மற்றவர்களுக்குத் தலைவனாகி, பகைவரை அழித்து, வெற்றிபெற்று

அவர் நிலங்கவர்ந்து நீடூழிவாழ்வாயாக! இதோ வழி வழியாகப்பெற்ற இவ்வில்லேயும், இவ்வாளேயும் பெற்று அன்புருவாய் விளங்கும் நம் திருமுருகன் பேரருளினல் இவ்வேட்டுவ நாட்டைக் காப்பாயாக. (திண்ணனர் வணங்கிப்பெறல்) வேடுவர்களே! இனி நம் அருந்தவப் புதல்வனுகிய திண்ணனே உங்களுக்குத் தலைவனுகக் கொண்டு, நம்மிடம் காட்டிய பேரன்பை அவனிடம் காட்டி இன்புற்று இனிது வாழ்வீர்களாக!

திண். எந்தையே! தாங்கள் ஆசியுடன் அளித்த வில்லே இன்றே எடுத்து வேட்டையாடிவர விடைதர வேண்டுகின்றேன்.

நாகன். குழந்தாய்! நம் முருகக்கடவுளது திருவருளே துணையாகச் சென்று நல்வேட்டையாடி நாடு திரும்பிடுவாய். ஆயினும் திண்ணு! நீ கடுங்காட்டிலே நுழையாமல், குளிர்ந்த சோலேயின் வழியே சென்று வேட்டையாடு. உடம்பில் முட்கீறல்கள் இல்லாமலும், புதர்களுக்கிடையே அகப்பட்டுக்கொள்ளாமலும், திருஷ்டி தோஷமில்லாமலும் திரும்பவேண்டும். நாணு ஜாக்கிரதை!

நாண. ஐயனே! அவர் விஷயத்தில் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருப்போம். கவலே விடுங்கள்.

நாகன். மகிழ்வுற்ருேம். வீரர்களே! வில், அம்பு, கத்தி, கட்டாரி, கொண்டு, பெரும் வேட்டை நாய்களுடன் காட்டையடைந்து, பல விலங்குகள் வசிப்பிடமறிந்து, வலே கட்டி, பறை முழக்கி, அவைகளே வெளிப்படுத்தி வெட்டிச் சரித்து நம் பாலனின் வேட்டையை அதி உற்சாகப் படுத்தி வாருங்கள்.

நாண. உத்தரவுப்படி. நண்பர்களே! புறப்படுங்கள்.

திண். தந்தையே! அன்னேயிடம் விடைபெற்று, உடனே செல்லுகின்றேன். (வணங்கி யாவருடனும் செல்லல்.)

[ முதற்களம் முடிகிறது. ]

## களம் 2.

இடம் :— பொன்முகரியாற்றுச் சமீபமானவனமலேச் சாரல்.

காலம் :— முற்பகல்.

நடர் :— திண்ணன், நாணன், காடன், கந்தன், கடம்பன், குகன், இடும்பன் முதலானோர்.

[ கந்தன், கடம்பன் முதலிய வேடுவர்கள்வேட்டை நாய்களுடன் பிரவேசித்தல். ]

கந்த. [ உள்ளிருக்கும் இடும்பனேயும் ஏனைய சில வேடுவர்களேயும் நோக்கி ] அம்மானே வலேபக்கம் விரட்டுங்கள். ஆ ! அதோ தப்புகின்றது. மடக்குங்கள். மடக்குங்கள்.....அட சத் ஏ இடும்பா ! ஏன் அம்மானேத் தப்பவிட்டனே

( இடும்பன் பயத்துடன் குகனுடன் பிரவேசித்தல்.)

இடும். கந்த ! நான் என்ன செய்வேன் குறி தவறிவிட்டது.

கடம். அடடா ! நமது திண்ணனர் இச்சமயம் இங்கு இல்லேயே அவர் இருந்தால் இந்நேரம் அந்த மான் -

குகன். நம் சொந்தமாகும். அதில் தடையென்ன !

கந்த. ஏன். வீண் பேச்சுகள். நிறுத்துங்கள். ஆ ! ஆ ! நண்பர்களே அதோ கவனியுங்கள். அப்புதரின் மத்தியில் சல சல வென்னும் சப்தம் கேட்கின்றது. எடுங்கள் வில்லே.

( யாவரும் வில்லே வளேக்க " போருங்கள்! போருங் கள்! " என்னும் சப்தம் கேட்கின்றது. )

இடும். சகோதரர்களே ! நில்லுங்கள். நமது மனிதர்கள் யாரோ வருகின்றனர்.

(நாணனும், காடனும் அவ்விடமிருந்து பிரவேசித்தல்)

காட. பேஷ்! பேஷ்! நாங்கள் தக்க சமயத்தில் கூக்குரலிடா விட்டால் இந்நேரம் நம்மை யமபுரத்திற்கு அனுப்பி யிருப்பீர்களே!

கந்தன் மன்னிக்கவேண்டும். புதர்களுக்கிடையே அசைவு ஏற்பட்டதனுல் நாங்கள் தங்களை வேறுவிதமாக எண்ணி விட்டோம்.

நாண. மிருக இனமாக நினைத்தீர்களோ! வாஸ்தவந்தான் நமக்கும் விலங்குகளுக்கும் அதிக வித்தியாசமில்லை. நண்பர்களே! போதும் நீங்கள் இவ்விதமாகப் பிரிந்து பிரிந்து வேட்டையாடிக் கொண்டிருந்தால் நம் இளவரசரை எப்பொழுது கண்டுபிடிப்பது?

கடம். ஏன்! அவர் தங்களுடன் தானே கிழக்குப்பக்கம் சென்ருர். அவரை எங்கு பிரிந்தீர்கள்?

காட. ஆம்! அவர் எங்களுடன் கூடவே வந்தார். நாங்கள் யாவரும் அதி உற்சாகத்துடன் வேட்டையாடிக்கொண்டிருந்தோம். அச்சமயம் நம் வலைக்குள் அகப்பட்ட ஓர் பன்றி அதை அறுத்துக்கொண்டு அதிவேகமாக ஓடி மலையிலே ஒளிந்தது. உடனே கடுங்கோபங்கொண்ட திண்ணனர் அதைத் துரத்திக்கொண்டே ஓடினர். நாங்களும் எவ்வளவோ கவனமாகப் பின்தொடர்ந்தும், எங்கள் கண்களுக்குப் புலப்படாது மறைந்துவிட்டனர். இனி என்ன செய்வது. அவரைத் தேடிவர ஒவ்வொரு திசைக்கும் வேடுவர்களை அனுப்பியபின் நாங்களும் இப் பக்கம் அவரைத் தேடிவருகிருேம்.

குகன். ஐயோ! இதென்ன சங்கடம். நம் கதி பின் என்ன ஆவது. தலைவர்களே! நாங்கள் இப்பக்கம் சென்று தேடிவருகின்ருேம். கவலைப்படாதீர்கள்.

காட. சரி! நம் அரசரைக் காண்பீர்களாயின், அவ்விடத்தை குறித்தீயின் மூலமாக நமக்கு வெளிப்படுத்துங்கள்.

கந்த. அவ்விதமே செய்கின்றோம். (தன்னுடன் வந்தவர்களை நோக்கி) நண்பர்களே! நமது அரசரைக் காணும்வரை நாம் ஒன்றும் அருந்தலாகாது. வாருங்கள் என்னுடன்.
(யாவரும் செல்லல்)

நாண காடா! நம் இளவரசர் இம்மலைக்கு அருகில் தான் வந்திருக்கவேண்டுமென்று கருதுகின்றேன்.

காட. ஐயோ பாவம்! அவர் இன்னும் பகல் போஜனம்கூட அருந்தவில்லையே, இதற்கு என்ன செய்வது. எனக்கும் பசி அதிகரிக்கின்றது.

நாண. காடா! அவரைப்பார்க்கும்வரை நாம் ஜலம்கூடப் பருகலாகாது. வா! நாம் இம்மலையைச் சீக்கிரம் சுற்றித் தேடி வரலாம்.

காட. நண்பா! பொறு! ........ ஆ! இதென்ன சப்தம்.

நாண. ஆம். யாரோ ஓடும் சப்தம் கேட்கின்றது. ஒருக்கால் நமது அரசரோ இவ்விதம்—

காட. சரி. யாராக இருந்தாலுமென்ன வா பார்த்துவரலாம்.

(இருவரும் ஓடி மறைகிறார்கள். பின்புறம் ஓர் கோரமான பன்றி ஓடி அருகில் உள்ள ஒரு குன்றின் சிறு புதர்களுக்கிடையே அயர்ந்து விழுகின்றது. திடிரென்று திண்ணனார் அவ்விடம் ஓடிவருகிறார்.)

திண். (சுற்றிப் பார்த்துவிட்டு) அப்பன்றி மறைந்த இடம் தெரியவில்லையே. இதோ! இதோ! அதன் காலடிச் சுவடுகள் (அதன் வழியே செல்ல, அயர்ந்து கிடக்கும் பன்றியைக்கண்டு) ஆ! இவ்விடத்திலா நீ அயர்ந்தனை (வாளை உருவி அதை வெட்டுகிறார்) அப்பா! இவ்வளவு தொந்தரவா எங்களுக்கு அளித்தனை. உன்னால் எவ்வளவு வேடுவர் இந்நேரம் மனம் வருந்திக்கொண்டிருப்பார்கள். என்ன செய்வது. நீ தப்பித்துக்கொள்ள எவ்வளவோ உபாயங்கள் செய்தும் என்னால் நீ மடியவேண்டும் என்று ஈசன் உன்

தலையில் எழுதினர் போலும்!

(வாளில் உள்ள உதிரத்தைத் துடைக்க நாணனும் காடனும் ஓடிவருதல்.)

நாண. என் ஐயனே! தங்களை மீளவும் காணப்பெற்றோமே. அனலிடைப்பட்ட மெழுகுபோல எம் நெஞ்சம் உருக, உம்மை எல்லா இடங்களிலும் தேடினோம். கொடிய விலங்குகள் சஞ்சரிக்கும் இக்கானில் எங்களை விட்டு இவ்வாறு தனித்துச் செல்லலாமா?

திண். நாண! உங்கள் அன்பிற்கு மிகவும் சந்தோஷம். என்னைக் காப்பாற்றிக்கொள்ளத்தக்க சக்தியில்லாமலா, நான் அப்பன்றியைத் தொடர்ந்தேன்.

காட. அடவியின் பழக்கம் அதிகமில்லாததால் நாங்கள் மிக வெருண்டோம். ஆமாம் அரசே! தாம் துரத்திய பன்றி எங்கு மறைந்தது.

திண். மறைந்ததா! அல்ல. அல்ல. அது என்கையால் இறந்தது அதோ அப்பாறையின் அருகில் பாருங்கள். (இருவரும் பார்த்து திகைப்புடன் திரும்புதல்)

நாண. ஆ! என்ன ஆச்சரியம். அக்கோரமான பன்றியைத் தாம் பின்பற்றியதுமின்றி அதை இரு துண்டங்களாகவும் செய்து விட்டீர்களே! அதிகப் பழக்கமுள்ள வேடுவர்களும் இத்தகைய வீரச் செய்கையை செய்வது அரிதாயிற்றே! அரசே! தாம் செய்த செய்கை மிகவும் பெருமை பாராட்டத் தக்கதே.

காட. (தனக்குள்) இவரே நமக்கு எற்ற தலைவர் — ஐயனே! வேட்டையின் களைப்பினால் பசி அதிகரித்து எங்களை வருத்துகின்றது.

நாண. ஆம்! தங்களைக் கண்டபின்பே உணவருந்தத் தீர்மானித்தோம். தங்களையும் கண்டோம். இனி நாம் உடனே—

திண். இனி ! உணவருந்த வேண்டியதுதான். நண்பர்களே ! உடனே இவ்விடத்தில் தீ உண்டாக்கி, நான் ஆவி நீக்கிய பன்றியை அறுத்து வதக்குங்கள். அதனையுண்டு மீளவும் விலங்குகளை சங்கரிக்கச் செல்வோம்.

காட. குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமே ?

நாண. காடா ! அதைப்பற்றி நீ யோசிக்கவேண்டாம். அருகினி லிருக்கும் பொன்முகரி யாற்றில்தான் நீர் நிறைந்து போகின்றதே.

திண். நாணு ! நாம் இருவரும் பொன்முகரி சென்று, நீர் நிரப்பிக்கொண்டு வருவோம். அதற்குள் காடன் அப் பன்றியைக்கீறிப் பக்குவஞ்செய்யட்டும்.

நாண. சரி ! செல்வோம். புறப்படுங்கள்.

( திண்ணனும் நாணனும் புனல்கொணர ஏக, காடன் தீ உண்டாக்க ஆயத்தம் செய்கிறான் )

[ இரண்டாங்களம் முடிகிறது ]

## களம் 3.

இடம்—இருளடந்த அடவி

காலம்—முற்பகல்

நடர்:— திண்ணனும், நாணனும்.

(திண்ணனும், நாணனும் பேசியவண்ணம் பிரவேசித்தல்.)

திண். பொன் முகரி இன்னும் எவ்வளவு தொலையில் உள்ளது?

நாண. இன்னும் சிறிது பொழுது நடந்தால் அதன்கரையை அடையலாம்.

திண். அப்படியா! நண்பா! இங்குத்தோன்றும் இயற்கை விநோதங்களையும் குளிர்ந்த தென்றலையும் எண்ணுமிடத்து என் மனத்தில் ஓர் வித இன்பம் உண்டாகின்றதே?

நாண. அரசே! அருகிற்செல்லும் பொன்முகரியே அந்தகைய உணர்ச்சிக்குக் காரணம்.

திண். (சற்று கவனித்து) நண்ப! அதோதோன்றும் மலைத் தொடரின் பெயர் என்ன.

நாண. அதைத்தான் திருக்காளத்தி மலை என்று கூறுகிறார்கள். ஆம். அரசே! நாம் அங்கு சென்றால் — —

திண். நாணு! அங்கு சென்றால் என்ன?

நாண. ஐயனே! அவ்விடத்தில் குடுமித்தேவர் வசிக்கின்றார். நாம் அங்குசென்றால் அவரைக் கும்பிட்டு வரலாம்.

திண். ஆ! ஆ! குடுமித்தேவரைக் கும்பிடல்வேண்டும். நண்பா சீக்கிரமாக நாம் ஆற்றையடைந்து அவரை தரிசிப்போம் வா!

நாண. அட கஷ்டமே! பசியொருபக்கம் காதை யடைக்கின்றதே. தெரியாத்தனமாகவன்றோ தேவர் இருப்பைக்

தெரிவித்தோம். என்ன செய்வது. ஸ்வாமி! நமக்காக காடன் காத்திருப்பானே.

திண். காடனைக் காக்க வைக்கலாம். குடுமித்தேவரைக் காக்க வைக்கலாமோ! சீக்கிரமாக ஓடிவா. (ஓடுகிறார்.)

நாண. இதென்ன கஷ்டம். (ஓடுகிறான்)

[மூன்றும் களம் முடிகிறது]

## களம் 4.

இடம் :— பொன் முகரியாற்றை அடுத்த மலைத் தொடர்களின் இடையே உள்ள ஓர் கல்லால விருக்ஷத்தடி.

காலம் :— நண்பகல்.

நடர் :— திண்ணனும், நாணனும்.

[விருக்ஷத்தடியில், புஷ்பங்களினாலும், வில்வ தளங்களினாலும் அருச்சிக்கப்பட்ட ஸ்ரீ காளத்திநாதர் சிவலிங்க ஸ்வரூபமாகக் காணப்படுகிறார்—திண்ணனும், நாணனும் பிரவேசித்தல்.]

திண். நண்பா! இவ்விடம் எவ்வளவு மனோரம்மியமாகத்தோன்றுகிறது கவனித்தனையா? இந்த இடத்தை அணுக அணுக என்மேல் ஏற்றப்பட்ட பெருத்தபாரம் குறைவது போலன்றோ தோன்றுகிறது. ஆ! இனியாது நிகழுமோ அறியேன்.

நாண. இளவரசே! தாங்கள் கூறுவது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதிருக்கட்டும்.... அதோ கவனித்தீர்களா அச்சிவலிங்கத்தை. அவரைத்தான் குடுமித்தேவர் எனக் கூறுகின்றனர்.

திண். (உற்று கவனித்துப் பின் கைகூப்பி) பிரபோ! பிரபோ!

(அருகில் சென்று தன்னைமறந்து சிவபெருமான் திருவடிகளின்கீழே வீழ்கின்றார்.)

நாண. இதென்ன! நாம் கும்பிட வந்ததெய்வம் நம்மை வம்பிற்குள்ளாக்கி விடும்போலிருக்கிறதே! இனி நாம் சற்றுக்கவனமாய் இருத்தல்வேண்டும்..... ஐயோ! நம் அரசர் தன் நினைவை இழந்தனரே. (வஸ்திரத்தினால் விசிறுகிறான்)

திண். (எழுந்து) ஆ! என்தாயே! என் தந்தையே! என் இறையே! குருடன் கையகப்பட்ட தெய்வமணிபோல் தாம் எனக்ககப்பட்டீர். (ஓடி இலிங்கத்தை இறுகத்தழுவி) தாம் நாயேனுக்குக் கிடைக்க அற்பன் யான் பூர்வ ஜன்மத்தில் யாது தவம் செய்திருக்கவேண்டும்.

நாண. (தன்க்குள்) பசியினால் இவ்வாறு கஷ்டப்பட பூர்வ ஜன்மத்தில் யான் என்னபாவம் செய்திருக்கவேண்டும்.

திண். என்னை ஆட்கொள்ளும் இறையே!

"யானையும் புலியும் எண்கும் யாளியும் உளவுங் கூர்ங்கோட்டு
ஏனமும் திரியும் காட்டுள் எந்தைநீ துணையு மின்றிக்
கூனல்வில் தடக்கை வேடர் குலமென இருப்பதென்னே
ஊன் உணவு உனக்கினியாவருண்கெனத் தருவ ரந்தோ"

என் தாயே! யானை, புலி, கரடி, முட்பன்றி, முதலிய பல கொடிய வன விலங்குகள் நடமாடித் திரியும் இந்த அடவியில் உதவிக்கு ஒருவருமில்லாமல் வனவேடர்கள் போலத் தாம் ஏன் தனித்திருக்கவேண்டும். ஐயோ! பாவம். தம்முடைய பசியை ஆற்றிக்கொள்வதற்கு, நல்ல ருசியுள்ள மாமிசத்தைக் கொடுப்பதற்குக் கூட உதவி இல்லையே. ஸ்வாமி! நான் சொல்லுகின்றபடி கேளும். உமக்கு யாவும் இனிதே முடியும்.

நாண. அரசே! தாங்கள் உரைத்த வார்த்தைகளெல்லாம்,

தங்கள் குடிகளிடமன்ரோ இயம்பல் வேண்டும். அதை விடுத்து இவரிடத்தில் பேசமுயலுதல் வீணே ஆகும்!

திண. நாணு! உங்களுக்குத்தான் வேண்டிய சௌகரியங்கள் இருக்கின்றனவே. இவருக்கு என்ன இருக்கின்றது. இதோபார் இவரை! வெயிலிலும், மழையிலும், குளிரிலும், பனியிலும் வாடி ஏங்கி நிற்கின்றனர். ஆதலின் உதவி இவருக்கே தேவை........ ஸ்வாமி! உடனே என்னுடன் வாருங்கள். வருவீரேல் தேன், தினைமா, காய், நற்கனி, கிழங்கு, முதலியவைகளையும், மான், முயல், பன்றி, முதலிய பல விலங்குகளின் நல் இறைச்சியையும், யானே கொண்டுவந்து உமக்குத் தருவேன். மேலும் உம்முடைய துணைக்கு வேண்டிய ஏவலாளர்களையும் யானே நியமிப்பேன். ஆதலின் வீணாக இங்குத் தனித்திருக்க வேண்டாம்........ என் ஐயனே! என்ன வாளா வீற்றிருக்கின்றீர்.

நாண. இதென்ன! சித்தப்பிரமையா அல்லது பசியினால் உண்டான பிதற்றலோ. தெரியவில்லையே!

திண். (முழங்காலிட்டு) ஸ்வாமி! என்ன பேசாமலிருக்கின்றீர். நீர் இங்கே தனித்திருப்பது எனக்கிஷ்டமில்லை. ஆதலின் என்மீது தேவரீர் திருவுளமிரங்கி இப்பொழுதே உடுப்பூருக்கு வரவேண்டுகின்றேன்........... இறைவரே! நான் பலவாறு வேண்டியும் மௌனமாய் இருக்கின்றீரே! ........ ஓகோ தமக்கு இவ்விடமே இருப்பது தான் விருப்பம் போலும். அவ்வாறாயின் யான் மாத்திரம் உம்மை விட்டு நீங்கி எவ்வாறு உய்வேன்.

நாண. ஸ்வாமி! நேரமாகின்றது. குடுமித்தேவரை வணங்கி சந்தோஷமாக வாரும். மற்ற வேடுவர்களெல்லாம் நம்மைக் காணாது தயங்கித் தவிப்பார்கள் இந்நேரம்.

திண். நாணு! அவர் சந்தோஷமாயிருப்பதைக் கண்ட பின்னரே யான் வருவேன். பொறு! பொறு!! —— நண்பா!

இப்பெருமானை அபிஷேகம் செய்வித்து நறுமணம் வீசும் மலர்களினாலும் வில்வதளிரினாலும் அருச்சிக்கப்பட்டிருக்கின்றதே. இத்தகைய பரிசுத்தமான செய்கையைச் செய்யும் உத்தமர் யாராயிருக்கலாம்?

நாண. ஐயனே! ஒரு சமயம் நானும் தங்கள் பிதாவும் வேட்டையாடிக்கொண்டு இப்பக்கம் வந்தோம். அச்சமயம் ஒரு அந்தணர் இவருக்கு நன்னீராட்டி, நறுமலர் சூட்டிப்பின் இனியமுது ஊட்டிச்சென்றதைக் கண்டேன். ஒருக்கால் அந்த ஐயரே இன்று அவ்விதம் செய்திருப்பாரென எண்ணுகின்றேன்.

திண். இவர் அமுது அருந்தினரோ.

நாண. (வேடிக்கையாய்) அது மாத்திரமா. இவர் அந்தப் பிராமணரிடம் பேசுவதாகக்கூட கேள்விப்பட்டேன்.

திண். ஓகோ! அறிந்தேன்! அறிந்தேன்! அவ்விதமாகவே நாமும் இவரை பூஜித்தால்தான் நம்மீது பிரியங்கொள்வார் போலும்.......... சரி.... சரி.... யானும் அவ்விதமே இனி செய்வேன்— சீ! என்ன நாம் இன்னும் யோசித்து நிற்கின்றோம். அதிக நாழிகையும் ஆய்விட்டது. ஸ்வாமியோ மிகப் பசித்திருக்கின்றனர். இனி இவருக்கு இனியசுவையுள்ள இறைச்சி கொண்டு வந்து இடல் வேண்டும்— அந்தோ! இறைச்சி கொண்டு வரச் சென்றால் தீயவிலங்குகள் இவருக்கு ஆபத்தை விளைவிக்குமே! அந்தோ உம்மை எவ்வாறு விட்டுப்பிரிவது. பிரியாமலிருந்தாலோ நீர் பசியினால் பரிதபிப்பீர். இந்த கஷ்டத்திற்கென்ன செய்வது........ பிரபோ! கவலைப்படாதீர். தாம் சாப்பிடுவதற்கு நல் இறைச்சி இன்னே கொண்டு வருகின்றேன். (வில்லை எடுத்து ஓடியவர் மீண்டும் திரும்பி, சிவனை இருகத் தழுவி முத்தமீந்து) என் ஐயனே! குன்றிடைத் தோன்றிய குண மணியே! என் மனங்கவர்ந்த மன்னனே!

"உழுந்துருள் பொழுதின் மீள்வேன் ஒருகண மேனும் தாழேன்
வழங்குறு கொடுவி லங்கு வருமென அஞ்சேல் ஐய
எழுந்துமேல் வந்த தாயின் என்னையொய் என்னக் கூவீர்
குழைந்தவில் கொண்டுகொன்றே கொழுந்தசை கொடுப்பனன்றே"

என் ஐயனே! எங்குல திலகமே! தமது வெம் பசியைப் போக்க இனிய இறைச்சியை இன்னே கொணர்கின்றேன். அதுவரை கொடிய விலங்குகள் வருமென அஞ்ச வேண்டாம். அவ்விதம் வருவதாகத் தெரிந்தால் "விரைவினில் அழையும்" உடனே ஓடிவந்து அதன் ஆவியைப் போக்கி அதன் கொழுந்தசையை உமக்கு ஊட்டுகின்றேன் திடமாக இருங்கள், இதோ வருகின்றேன்.

(வணங்கித் துள்ளி ஓட நாணன் பிரமித்து நிற்கின்றான்.)

நாண. இவருக்குப் பித்தம் அதிகரித்து விட்டது என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை— சீ! இனியும் நாம் தாமதிக்கலாகாது. உடனே இவரைப் பின் தொடர்ந்து உடுப்பூரில் கொண்டு சேர்க்கவேண்டும் இல்லையேல் நமது தலை தரிப்பது அரிது. (ஓடுகிறான்.)

[நான்காம் களம் முடிகிறது.]

## களம் 5.

இடம் :— பொன்முகரியைச் சமீபத்த அடவி.

காலம் :— நண் பகல்.

நடர் :— திண்ணன், நாணன், காடன்.

காட. (பன்றியின் இறைச்சியை நெருப்பில் வாட்டிக்கொண்டிருத்தல்) இதென்ன விந்தை! இவ்வளவு பொழுதாகியும் அவர்களைக் காணோம். ஒருக்கால் போன இடத்தில் - - -

(திண்ணனும் நாணனும் பிரவேசம்)

அரசே! தங்கள் கட்டளைப்படி இறைச்சியை நன்ருய் வாட்டியிருக்கின்றேன். அமர்ந்து சாப்பிடும்.

திண். சரி. எட்டநில்! (தீயருகே அமர்ந்து இறைச்சியைத் தாமே வாட்டுகிருர்) ஆ! பிரபோ! பிரபோ!

காட. (இரகசியமாய்) நாணு! என்ன சமாசாரம்! இவர் ஏன் இப்படிச் செய்யவேண்டும்?

நாண. போன இடத்தில் வந்த வம்பு இது.

காட. நாணு! என்ன உளறுகிருய். என்ன நடந்தது சொல்?

நாண. நண்பா! காளத்திமலையில் இருக்கும் குடுமித்தேவரைக் கண்டு அவரை இறுகத் தழுவிக்கொண்டு மரப்பொந்தைப் பற்றிய உடும்புபோல் அவரை நீங்க மனமில்லாதவராய் நின்றனர். பின்னர் ஒருவாறு தாமே தேறி மிகக் கஷ்டத்துடன் அவரைப் பிரிந்து அவருக்கு இவ்விறைச்சி கொண்டு போகும்பொருட்டு இங்கு வந்திருக்கின்றனர். நான் எவ்வளவோ தடுத்துப் பேசியும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் வீணயிற்று.

காட. என்ன! நீ கூறுவது உண்மையா!

நாண. அதிற்சிறிதும் சந்தேகமில்லை. ஏ காடா! அதோ கவனி அவர் நவீனச் செய்கைகளை!

திண். (வதக்கிய இறைச்சியின் துண்டு ஒன்றைக் கடித்த வண்ணம்) ஆ! ஆ!! என் ஐயனுக்கேற்ற இறைச்சி. இதில் சற்றும் எலும்பு இல்லை. மிகவும் ருசிக்கின்றது. ஆதலின் இதை எடுத்து வைப்போம். (கூரிய அம்பில் கோத்துக் கொண்டு மற்றொரு துண்டை வாட்டுகின்றார்)

காட. நாணு! நீ கூறிய யாவும் உண்மைதான். யாவும் உன்னால் அன்றோ வந்தது. [திண்ணனை நோக்கி] இறைவரே! தாம் என்ன செய்கிறீர். உமக்குப் பசிக்கவில்லையா. என்ன என்னுடன் பேசாதிருக்கின்றீர்?

நாண. ஏன் வீண் சிரமப்படுகின்றனை. அவர் நம்முடன் பேசமாட்டார். காடா! குடுமித்தேவரைப் பார்த்த உடனே நம் குலத்தலைமையை விட்டு விட்டார். ஆதலின் இவரை இனித்திருப்புதல் மிகவும் அசாத்தியமான காரியம்.

திண். (போதிய இறைச்சித் துண்டுகளை அம்பிலே கோத்துக்கொண்டு மற்றொரு துண்டை கடித்தல்) சீச்சீ! இதில் கடினமான எலும்பு இருக்கின்றது. இது என் ஐயனின் வாயைப் புண்படுத்தி விடும். (கையில் உமிழ்ந்து பார்த்து எறிகிறார்)

காட. அந்தோ! பெறுதற்கரிய இறைச்சியை வதக்கி- பல்லினால் அதுக்கி வீணே எறிகின்றார். உருசியுள்ள பாகத்தை வீணே அம்பினில் சேர்த்துக்கொள்ளுகின்றார். தாம் அதிகப்பசி உடையவராய் இருந்தும் சாப்பிடேன் என்கிறார்.

நாணு. நமக்கும் கொடேன் என்கிறார்!

காட. ஆம்! நண்பா! எனக்கோ பசி காதையடைக்கின்றது. இனிச்செய்வது யாது. இவர் இப்பொழுது ஆகாரம் கொள்ளாவிட்டால், பசியினால் வாடி இளைத்திடுவர். பின் நம் அரசி, நம்மை மிகவும் கோபிப்பாரே. இவரைக்

கூப்பிட்டாலும் மறுமொழி பகரமாட்டேன் என்கிருரே. ஐயோ! நாம் என்னசெய்வது.

நாண. நண்பா! இனி இங்கு வீண்பொழுது போக்குவதில் யாது பயன். இவரை மறுமுறை அழைப்போம். வந்தால் ஆயிற்று. இல்லையேல் உடுப்பூருக்கு உடனே சென்று, நமது மகாராஜரிடம் முறையிட்டு விடுவோம்.

காட. ஆம். அப்படிச் செய்தலே நலம். இவருடன் இனி நம்மால் வாதாட முடியாது. சீக்கிரமாக அழை.

நாண. எமதையனே! வீணுகக் காலங்கழிக்கின்றீர்களே! பசி அதிகரிக்க வில்லையா? புறப்படும்.

திண். [ குதித்தெழுந்து ] ஆ! கெட்டேன்! கெட்டேன்!! அதிக நேரம் ஆய்விட்டதே. என் உயிர்த்துணைவராகிய ஈசன் மிகுந்த பசியினுல் இளைத்து வாடுவரோ! கொடிய விலங்குகளால் அச்சமுறுவரோ! ஆ! இரக்கமற்ற கொடும்பாவியானேனே! — ஸ்வாமி! இதோ புறப்பட்டேன். [ இறைச்சியை எடுத்து ஓடியவர் நின்று ] ஆ! நம் பெருமான் மஞ்சனமாடுவதற்கு நீரும், சூட்டிக்கொள்வதற்கு பூவும் தழைகளும் வேண்டுமே. அவைகளை எப்படி எடுத்தேகுவது. ( யோசித்து ) ஆம். புஷ்பத்தை நம் தலையிலும், ஜலத்தை நம் வாயிலும் எடுத்தேகுவோம். (சந்தோஷத்துடன் ஓடுகிருர் )

காட. இதென்ன வேடிக்கை அரசே!

நாண. அரசே! நில்லும்! நில்லும்!!

திண். ( ஓடிக்கொண்டே ) நண்பர்களே! நில்லுங்கள்! நில்லுங்கள் ( மறைதல் )

நாண. சரி. சரி! நம்மையும் பைத்தியக்காரராக எண்ணிவிட்டார் காடா! இனியும் நாம் தாமதிக்கலாகாது புறப்படு நமது அரசரிடம்.

காட. சரி. வா! மற்ற வேடுவர்களையும் அழைத்துச்செல்வோம்.

நாண. ஆமாம்! காடா! நாம் அரசரிடம் பேசும்பொழுது வெகு ஜாக்கிரதையாகப் பேசவேண்டும்.

காட. ஆம். ஆம். (இருவரும் பேசிக்கொண்டே மறைதல்)

[ஐந்தாங் களம் முடிகிறது]

## களம் 6.

இடம் :— குடுமித்தேவர் வீற்றிருக்கும் கல்லால விருக்ஷத்தடி.

காலம் :— பிற்பகல்.

நடர் :— திண்ணன்.

[திண்ணனர் பதைபதைப்புடன் ஓடிவந்து இலிங்கத்தின் மீதிருக்கும் புஷ்பங்களைக் கரங்களினாலும் செருப்புக் கால்களினாலும் ஒதுக்கி, பின் தன் வாய்நீரை அப்பெருமான் தலையில் பெய்கின்றார்]

திண். என் கண்மணியே! கருணாநிதியே! இனிக்கவலை விடுங்கள். இந்தப் புஷ்பத்தைத் தமக்குச் சூட்டியபின் இனிய உணவு அளிக்கின்றேன். (தன்மேல் அணிந்துவந்த புஷ்பத்தைச் சூட்டியபின் இறைச்சியை முன்னர் வைத்து) என் ஐயனே! இனித் தாம் ஆகாரம் கொள்ளலாம் — என்ன பேசாமல் இருக்கின்றீர்! — ஒருக்கால் இந்த ஆகாரம் எவ்விதமாக யிருக்குமோ என யோசிக்கின்றீரோ! — ஸ்வாமி! நல்ல பன்றியின் கொழுப்பான இறைச்சியை நன்கறிந்து, நெருப்பிலே பதத்தோடு காய்ச்சி, இனிப்புள்ளதா அல்லதா என் பதை யானே என் பல்லினால் அதுக்கி, பரிக்ஷித்துக்கொண்டு

வந்திருக்கின்றேன். ஆகவின் சுவையைப்பற்றி யோசிக்க வேண்டாம் — உம்! வாயைத் திறவுங்கள். யானே தமக்கு ஊட்டுகின்றேன்.

[ இலிங்கத்தின் வாய் திறக்க இறைச்சியை ஊட்டுகின்றார் ]

அப்பா! இப்பொழுதுதான் என்மீது தயை வந்ததோ சரி. சரி. சாப்பிடும் — மெள்ள! மெள்ள!! அவசரப் பட வேண்டாம் — கண்டத்தில் மாட்டிக் கொள்ளப் போகின்றது — மெதுவாக விழுங்கும் — இனிப்பாக இருக்கின்றதா? என்ன கீழே உமிழ்கின்றீர்! (வேறு துண்டை எடுத்து) இது என்ன! அதற்குள்ளாக வாயை மூடிவிட்டீர் — திறவும்! திறவும்!! — பிறகு எனக்குக் கோபம் வரும் — ஓகோ! உமக்கு வயிறு நிறைந்து விட்டது. அதனால்தான் வாயை மூடிக்கொண்டீரோ — அறிந்து கொண்டேன்! இனித் தம்மைத் தொந்தரவு செய்யவில்லை. (மீதி இறைச்சியைத் தான் தின்றுகொண்டே) தந்தையே! இன்றைய தினம் தாம் அதிக நேரஞ்சென்று அமுதுண்டதால் களைப்பாகத் தோன்றும். ஆதலால் சற்று சிரமபரிகாரம் செய்துகொள்ளுங்கள்! நான் அருகில் நின்று தம்மைக் காவல் செய்கின்றேன் —

(மிருகங்கள் ஓடும் சப்தம் கேட்டல்)

ஆ! இதென்ன சப்தம். ஓகோ. துஷ்ட மிருகங்கள் அருகினில் நிற்கின்றன போலும். ஸ்வாமி! தாம் நிர்ப் பயமாய் தூங்கும். நான் அருகில் உள்ள ஓர் உயர்ந்த மரத்தின்மீதமர்ந்து, துஷ்ட மிருகங்கள் தமது அருகில் வாராவண்ணம், சித்த அடிக்கின்றேன் (மறுபடியும் அணைத்து முத்தமீந்து) என் கண்மணியே! அஞ்சாமல் தைரியத்துடன் உறங்கும்.

[ வணங்கி வில்லெடுத்து மறைதல் ]

[ ஆறும் களம் முடிகிறது ]

# களம் 7.

இடம் :— குடுமித் தேவர் வீற்றிருக்கும் கல்லால விருக்ஷத்தடி.

காலம் :— அதிகாலை.

நடர் :— திண்ணன், சிவகோசரியர்

திண். (பிரவேசித்து) ஸ்வாமி! விடியும் சமயமாயிற்று கடந்த இரவெல்லாம் உம்மைக் கருத்துடன் காத்துவந்தேன். இப்பொழுது துஷ்ட விலங்குகளும் தத்தமிருப்பிடமேகின ஆதலின் நான் அதி சீக்கிரமாகச் சென்று வேட்டையாடி இன்னும் அதிக ருசியுள்ள விலங்கினங்களைக் கொன்று வாட்டிப் பதப்படுத்திக் கொண்டுவருகின்றேன்.

[வணங்கிச் செல்கிறார். சிறிது நேரஞ்செல்ல சிவபக்தரான **சிவகோசரியர்** திருமஞ்சனம், புஷ்பம் முதலியன வைகளுடன் சிவநாமஸ்மரணம் செய்த வண்ணம் பிர வேசித்தல்.]

சி கோ. ஏ காளத்தி நாதா! நீண்டகாலமாக, ஐம்புலன்களையும் அடக்கி, மனதை ஒருநிலையில் நிறுத்தி சதாகாலமும் தம்மை நோக்கிப் பணிந்து பூஜித்துத் துதிசெய்தும், அடியேனை இன்னும் ஆட்கொள்ளா திருப்பதும் முறையோ! எப்பொழுதுதான் என் மீது கிருபை யுண்டாகுமோ. சிலந்திக்கும், காளத்திற்கும், அத்திக் கும், முக்தி அளித்த சீகாளத்தி வாஸா! உமது எழிலுடைய திருப்பாதங்களை அடியேன் தலையில் சூட்டிக் கொள்ளும் நன்னாள் எந்நாளோ தெரியேன்.

[பூஜைப் பாத்திரங்களைக் கீழேவைக்கும் சமயம், அங்குக் கிடக்கும் இறைச்சித்துண்டங்களைக் கண்டு அப்பால் துள்ளிக் குதித்து.]

ஆ! சம்போ! சிவ! சிவ! சிவ!! — இந்தத் துர்க்கந்தம் வீசும்படியான, இவ்வூன் துண்டங்கள் இப்பரிசுத்தமான

இடத்திற்கீரணப் படுகின்றனவே. ஹா ! எந்தச்சண்டாளர் இக்கருமத்தைச் செய்திருப்பார் ! — ஒருக்கால் கொடிய விலங்குகள் இங்குவந்து, இறைதின்று, மீதியை எறிந்திருக்கலாமோ. (சிவபெருமானைக் கவனித்து) ஆ ! ஆ !! இதென்ன வியப்பு ! நேற்று நான் சூட்டிய புஷ்பங்களை நீக்கி வேறு புதிய புஷ்பங்களை யார் இப்பெருமானுக்குப் போட்டிருப்பார்கள் !

"கொல்லுதலோடு அறியாமை குணமாகக்கொண்டொழுகும்
பொல்லாத சிலவேடப் புலைஞரே இது செய்வார்
ஒல்லாத செய்கையிதை உணர்வுடையோர் கண்டக்கால்
நில்லாம லிறந்திடுவர் நிற்கின்றேன் கொடுவினையேன்"

அடடா ! தேவாதி தேவாது திரு முன்னே தகாத இக்கொடுஞ் செய்கையைக் கொலைத் தொழிலுக்கும் அஞ்சா வேடுவப் புலைஞரே செய்திருக்கவேண்டும். ஏ நீலகண்டா ! அப்பாதகர் இத்தொழிலைச் செய்யத்தமது திருவுளமும் எவ்வாறு பொறுத்ததோ ! அந்தோ ! இத்தகைய பாபமான செய்கையைப் பார்த்த மெய்யன்புடைய பக்தர்கள் உடனே உயிர் விடு வார்களே ! அவ்வித மிருக்க, இதைப்பார்த்துக் கொண்டு கொடுவினையேன் அங்ஙனம் உயிர்விடாது நிற்க, ஏனோ என்னைப்படைத்தீர் ! — இனி அதைப்பற்றிச் சிந்தித்துக் காலத்தைக் கழிப்பதில் பயன் என்ன. வீணாக பூஜை காலம் தவறிவிடும். ஆதலின் இவ்விறைச்சிகளைத் திருவலகு கொண்டு சுத்தப்படுத்தி, கோமயந்தெளித்து பின் மீண்டும் ஸ்நானம் முடித்து, இந்த இடத்தை வேத மந்திரத்தினாலே சுத்தி செய்து, பின்னரே பூஜித்தல் வேண்டும். (திருவலகினால் சுத்திசெய்து) ஏ பசுபதீ ! இன்றையதினம் சற்றுத் தாமதமாகச் செய்யப்புகும் பூஜையை ஏற்றுக்கொண்டு அடியேனையும் மன்னித்தருள வேண்டும்.

(பூஜைப்பாத்திரங்களை எடுத்துச் செல்லுகிறார்.)

[ஏழாம் களம் முடிகிறது]

# களம் 8.

இடம் :— நாகனின் தனியறை.

காலம் :— காலை.

நடர் :— நாகன், தத்தை, நாணன், காடன், ஓர் காவலன்.

நாக. [ யோசித்த வண்ணம் உலாவிக்கொண்டிருத்தல். ] என்ன ஆச்சரியம்! வேட்டைக்குச் சென்ற நம் மைந்தன் இன்னும் வரவில்லை. ஆ! நம் மனைவி தத்தையை நாம் எவ்விதத்தில் இனித் தேற்றுவது — ஆ! அவளும் அதோ வருகின்றாள். (தத்தை வருத்தத்துடன் பிரவேசித்தல்.)

தத். நாதா! வேட்டைக்குச் சென்ற நமது புதல்வனை நாம் எப்பொழுது காண்பது. அவனைக் காணாத ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகம் போலத் தோற்றுகின்றதே! நீங்கள் என்ன பேசாமலிருக்கின்றீர்கள். ஏதாவது ஏற்பாடு செய்யலாகாதா?

நாக. கண்ணே! கவலைப்படாதே. திண்ணன் இன்று அகத்தியமாக வந்து விடுவான்.

தத். நாதா! எனக்குச் சந்தேகமாக இருக்கின்றது. காட்டில் ஏதேனும் துஷ்டமிருகங்களால் நமது பாலன் — —

நாக. மைந்தனைக் காணாத ஏக்கத்தினால் மனம் தோன்றியவாறு மொழிகின்றனையே. இனி அடிக்கடி அவ்வாறு நினையாதே. நமது புதல்வனுக்கு ஒரு தீங்கும் நேரிடாது. சிறந்த வில்லாளிகளான நாணனும், காடனும், அவனுடன்

சென்றிருக்கையில் திண்ணனைப் பற்றி நாம் கவலை யடையலாமோ.

தத். பெற்றமனம் பித்தல்லவா ! அதனால்தான் அவனைப்பற்றி அடிக்கடி கேட்கின்றேன்—ஏன் ! காட்டிற்கு யாராவது ஒரு தூதுவனை அனுப்பினால் என்ன ?

நாக. பெண்ணே ! உன் எண்ணமறிந்தே ஒரு ஒற்றனை முன்பே அனுப்பியிருக்கின்றேன். [ ஒரு வேடுவன் பிரவேசித்து வணங்கல் ) என்ன ! விசேஷம்.

வேடு. மகாராஜ் ! நாணனும், காடனும், தங்களைக்காணக் காத்திருக் கின்றனர்.

நாக. சீக்கிரமாக அவர்களை வரச்சொல். (வேடுவன் செல்ல நாணனும், காடனும், பிரவேசித்து வணங்கல்) நாணா ! திண்ணன் எங்கே ?

நாண. ஸ்வாமி ! அவருக்கு ஒரு தீங்குமில்லை.

தத். பின் எங்கே அவன் ! என் அந்தப்புரத்தை நாடிச் சென்றனனோ.

நாண. தாயே ! திண்ணனார், எங்களுடன் வரச் சம்மதப்படாமல், காட்டிலேயே வசிக்கின்றார். எவ்விதமாக அழைத்த போதிலும் வரமாட்டேன் என்கிறார்.

நாக. [ எழுந்து ] நாணா! என்ன உளறுகின்றனை ! நடந்ததென்ன? சொல்.

காட. இறைவரே ! பொறுத்தருளவேண்டும். தங்களுடைய அனுமதி பெற்றுத் திண்ணருடனும், மற்ற வேடுவர் களுடனும் கானையடைந்து, வேட்டையாடிக் கொண்டு காளத்தி மலையை அடைந்தோம். அவ்விடத்தில்,

திண்ணனூர், குடுமித்தேவரைக்காண நேரிட்டது. அவரைக் கண்டதும்-

தத். என்ன நேர்ந்தது என்மகனுக்கு!

நாண. அம்மணி! இதோ தெரிவிக்கின்றோம் — கண்டதும் அவர்மேல் காதல்கொண்டு அவரைவிட்டுப்பிரிய மன மில்லாமல், அவருக்கே அடிமையாயினர். நாங்கள் எவ்வளவோ மன்றாடி அழைத்தும் பதில் உரைக்காது பித்தம் தலைக்கேறியவர்போல், ஆடுகிறார், பாடுகிறார், ஓடுகிறார், நகைக்கிறார், கோபிக்கின்றார் —

தத் அந்தோ! என்மகனுக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டது போலும்! ஆ! என் கண்ணே! திண்ணா! நன்று! வேடுவர்களே! அவனை அக்கதியில் விட்டுவருவதற்காகத் தான் சிறந்த வில்லாளிகளான நீங்கள் இருவரும் சென்றீர்களோ? ஆ! குழந்தாய்! இராஜ வம்சத்தில் உதித்த நீ அநாதைபோல் சித்தப்பிரமைகொண்டு எங்குத் தவிக்கின்றனையோ ஐயோ! நீ ஒன்றும் அறியாப் பாலகனாயிற்றே. என் நெஞ்சம் துடிக்கின்றதே. உன்னை இவ்வித சஞ்சலத்திற்குள்ளாக்க நம் குல தெய்வமும் இசைந்ததோ. ஆ! தக்க துணையுடன் நீ செல்வதை நன்கறிந்தல்லவோ வேட்டையாடி வா உனக்கு விடை கொடுத்தேன். என் கண்ணே! காட்டில் நீ கதறியழ நாட்டில் நான் நலமுடன் எப்படிஉய்வேன்.

(மூர்ச்சித்துக்கீழே விழுகிறாள்.)

நாக. (தண்ணீர் தெளித்து மூர்ச்சையைப் போக்கி) பெண்ணே! எழுந்திரு! நடந்ததைக் குறித்து வருந்திக்காலத்தைப் போக்குவதில் என்ன பயன்.

நாண. அம்மணி! இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. அவர் இருப்பிடம் எனக்கு நன்கு தெரியும்.

நாக. சரி! நாண! உடனே நாம் அவ்விடத்திற்கு வருகின்றோம். புறப்படுவதற்கு வேண்டிய வற்றைச் சீக்கிரமே சித்தப்படுத்து.

நாண. சித்தம். பிரபூ!

தத். நானும் தங்களுடன் வருகின்றேன்!

காட. ஆம் அரசே! அவர்களும் நம்முடன் வருதல் நலம். ஒருக்கால் அத்தேவரிடம் வைத்திருக்கும் பக்தியை நம் பக்கம் திருப்பினும் திருப்புவர்.

நாக. பக்தி! ஆ! ஆ!! கடவுளை வணங்கும் முறையை செவ்வனே அறியாத நம் குமாரனுக்கு பக்தி தோன்றுவது எங்ஙனம்! நன்று நாண! நாமும் நம் மனைவியும் காளத்திமலைக்கு வருகின்றோம். புறப்பட உடனே ஆயத்தம் செய்யுங்கள். (உள்ளே செல்லல்)

நாண. உத்தரவு. [காடனும், நாணனும், செல்லல்]

[எட்டாங் களம் முடிகிறது]

## களம் 9.

இடம் :— காளத்தியப்பர் சந்நிதானம்.

காலம் :— காலே.

நடர் :— சிவகோசரியார், திண்ணன், நாகன், தத்தை, நாணன், காடன்.

[ சிவகோசரியார் பூஜைக்கு வேண்டிய பாத்திரங்களுடன், சிவஸ்தோத்திரஞ் செய்துகொண்டு வருகிருர். ]

சி. வ. ( மாமிசத்துண்டங்களேயும் மாற்றப்பட்ட புஷ்பங்களேயும் மீளவுங் கண்டு ) அந்தோ ! இந்த அநியாயத்தைத் தடுப்பதற்கு ஒரு வழியுமில்லேயா ? நான் இல்லாத சமயத்தில் வேண்டு மென்றே இத்தகைய பரிசுத்தமான இடத்தை அசுத்தம் செய்திருக்கின்ருனே அறிவிலி. இத்தகாத செய்கையை நாம் எவ்வாறு தடுப்பது. துஷ்டர்களே நிக்ரகம் செய்யும் ஹே! ருத்திரமூர்த்தியே ! கொடிய பாபச்செயலே தினப்படி செய்து வரும் அப்பாவியைத் தாம்இன்னும் தண்டிக்காமலிருக்கின்றீரே.

( நாசியைப்பிடித்துக் கொண்டே )

ஐயோ ! புலாலின் துர்க்கந்தம் இந்தச் சுத்தமான இடத்தை அசுத்தம் செய்கின்றதே ! — சீ ! நாம் யோசிப்பதில் பயனில்லே — பொழுது ஆக ஆக நாற்றமும் அதிகரிக்கின்றது. ஆதலின் இந்த இடத்தைச் சுத்திசெய்து பூஜிப்போம்.

( திரு அலகினுல் கூட்டி, ஜலம் தெளித்துவிட்டு, பிறகு தன் தலேயிலும் ஜலம் தெளித்தபின்னர் )

பிரபோ! ஆத்ம சுத்தியாய் நான் செய்யப்புகும் பூஜையையும் தாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். (முறைப் படி பூஜித்தபின் கைக்கூப்பி) பக்தர்களை இரக்ஷிக்கும் பரி பூரணா! இனியாவது அடியேன் மீது இரங்கி இத்தகைய சம்பவங்களை நாயேன் பாராவண்ணம் செய்ய வேண்டு கின்றேன்.

[வருத்தத்துடன் செல்லுகிறார் — சிறிது நேரஞ் செல்ல, வழக்கப்படி **திண்ணன்** வாயில் ஜலமும், கையில் இறைச்சி யும், தலையில் புஷ்பங்களுடனும் பிரவேசிக்கின்றார்.]

திண். [தண்ணீரைச் சிவபெருமான் தலையில் பெய்து] ஆ! இதென்ன விபரீதம்! இந்த இடம் சுத்தமாகக் காணப்படுவதுடன் என் ஐயன் கழுத்திலும், பாதத்திலும் புதிய புஷ்பங்களும் வில்வதளங்களும் காணப் படுகின்றன. இத்தகைய திருட்டுச் செய்கையை யான் இல்லாத சமயத்தில் யார் செய்திருப்பார்கள் — ஒருக்கால் நாணன் கூறிய அந்தண ரது செய்கையாக இருக்கலாமோ! - யாராய் இருந்தால் நமக்கென்ன. நமது ஐயன் சந்தோஷமாகக் காண்கிறார்! இனி நமது வேலையைக் கவனிப்போம்

(சிவபெருமான் மீதிருக்கும் புஷ்பங்களைமாற்றி, தான் அணிந்துவந்த புஷ்பங்களால் அவரை அலங்கரிக்கின்றார்.)

ஸ்வாமி! இப்பொழுதுதான் தாங்கள் சிறப்புடன் தோன்று கிறீர் — ஐயோ! பாவம்! என் ஐயனின் முகம் பசியினால் வாடியிருக்கின்றது. (இறைச்சியை முன்வைத்து) ஐயனே! இன்றும் உமது அதிர்ஷ்டமே நல்லிறைச்சி அகப்பட்டது. சாப்பிட வாயைத்திறவும் — என்ன யோசிக்கின்றீர்? நேரங்கழித்து வந்தேனே என்ற கோபமா! என் கண்ணின்மணியே! இனிச்சீக்கிரமே வந்து விடுகிறேன். இப்பொழுது வாயைத்திறவும். இன்றையதினம் மான், முள்ளம்பன்றி, குழிமுயல்,

முதலிய பல மிருதுவான மிருகங்களைக் கொன்று அவைகளின் அதி முக்கியமான தசைகளைப் பக்குவமாக வாட்டி, கொம்புத்தேனில் கலந்து கொண்டு வந்திருக்கின்றேன், இதைத் தின்னத் தின்னத் தெவிட்டாது..... எங்கே, கொஞ்சம் திருவாயைத் திறவுங்கள் யான் ஊட்டுகின்றேன் — என் கண்ணல்லவா! சீக்கிரம் திறவும். இல்லையேல் இறைச்சியின் இளஞ்சூடும் மாறிவிடும்.

(சிவபிரான் வாய் திறக்க ஊட்டுகிறார்.)

அப்பா! ஆ! ஆ!! மற்றொரு துண்டு — உம் வாயைக் காட்டும்! இல்லையேல் நான் அருகிலிருக்கும் சிங்கத்திற்குப் போட்டு விடுவேன் — உம். திறவும் என்ன, வர வரப் பிடிவாதம் செய்கிறீர்! நான் பிறகு உம்மைப் பிரம்பினால் அடிப்பேன். தெரியுமா.

(சிவபிரான் வாய்திறக்க, சேயனான **திண்ணன்** இறைச்சியை அவர் வாய்க்குள் தள்ளுகிறார்.)

அதுதான் சரி! அதுதான் நல்லவருக்கு அடையாளம். இன்னும் ஒரே ஒரு துண்டு, இதைமாத்திரம் சாப்பிட்டு விடும். பிறகு நீர் பேசாமல் உறங்கலாம். (ஊட்டுதல்) அப்பா! அவ்வளவுதான்! பொறும், வாயைத் துடைக்கின்றேன்

(வாயைத்துடைக்க, வெளியில் மனிதர் பேசும் சப்தம் கேட்டல்.)

ஹா! இதென்ன பேச்சுக் குரல்

[வில்லைக்கையில் யெடுத்து நாணேற்ற, வேந்தனான **நாகன், தத்தை, நாணன், காடன்,** முதலியோர்களுடன் பிரவேசிக்க, **திண்ணன்,** பிரமித்து நிற்கின்றார்)

தத். (அணைத்து) ஆ! திண்ணு! உன்னைப் பிரிந்து நான் எவ்வளவு நாட்கள் தவிப்பது!

நாக. பேஷ்! உன் செய்கைகள் ஒன்றும் எனக்குப்பிடிக்கவில்லை. போதும், உடனே புறப்படு நம் ஊருக்கு. தாய் தந்தையரைத் தவிக்க விட்டுத் தனித்திருப்பதழகோ?

தத். நாதா! அவனைக் கோபிக்காமல் பேசும். திண்ணு! உன்னுடைய செய்கைகளின் உண்மை தெரியவில்லையே! புறப்படு வீட்டிற்கு.

திண். தாயே! தந்தையே! இதுதான் எனக்கு வீடு (ஸ்வாமியை நோக்கி) இவர்தான் என் தாய், தந்தை, குரு. நான் இவ்விட மிருத்தலே எனக்குப் பூரணசந்தோஷத்தை யளிக்கின்றது. ஆதலின் நான் இவ்விடத்தைவிட்டு வரமுடியாது. தாங்கள் இனிச் செல்லலாம்.

நாக. ஆ! இது என்ன! என் மைந்தனு இவ்விதம் பேசுவது! ஏ திண்ணு! (முதுகில் தட்டி) உனக்குச் சித்தப்பிரமை பிடித்து விட்டதா என்ன?

தத். திண்ணு! உன்னைப் பெற்றவர்களிடம் கூடவா இவ்விதம் பேசுவது. வேண்டாம். நான் சொல்வதைக் கேள். வீணுக எங்கள் மனத்தை வருந்தச் செய்யாதே. வா எங்களுடன். (கையைப் பிடித்து இழுத்தல்.)

திண். (கையை உதறிவிட்டு) நான் வரமாட்டேன். வீணுக என்னைத் தொந்தரை செய்யவேண்டாம். நீங்கள் என்னை விட்டுச் செல்லுங்கள்

நாண. அரசே! தாம் செய்வது சற்றும் அழகல்ல. சகல போகங்களையும், அரண்மனையிலிருந்து அனுபவித்துக் கொண்டு ஆனந்தியாமல், கேவலம் காட்டு மனிதனைப்

போல், தன்னந்தனியே, தாய் தந்தையற்று, சுற்றமற்று, கஷ்டத்துடன், இவ்வடவியில் இந்த ஸ்வாமியுடன் வாழ்வது தம்போன்றவற்கு ஏற்குமா?

நாக. அப்பா திண்ணு! பிடிவாதம் செய்யாதே. ஊருக்குவா! இந்த ஸ்வாமியைப்போல் வேண்டிய ஸ்வாமிகளை நான் செய்து தருகின்றேன்

திண். ஹா! ஹா!! ஹா!!! (இலிங்கத்தைக் காட்டி,) இவரைப் போல் ஸ்வாமியைச் செய்வதா? உம்மாலாகாது. ஐயா! வீணாக என்னைக் கஷ்டப்படுத்துவதில் சற்றும் பயனில்லை. நான் இவரை விட்டுப் பிரிந்து அரைக்ஷண மேனும் தரியேன் ஆகையால் தாங்கள் என்னை இழந்ததாகக் கருதி உங்கள் நகர் செல்லுங்கள்.

நாக. சீ! நாம் இவனை எப்படியும் திருப்பவேண்டும். அப்பா! பெறுதற்கரிய இராஜவம்சத்தில் பிறந்து அதன் போகங்களை அனுபவியாமல் இவ்வாறு கஷ்டப்படுவதில் என்ன பயன்?

திண் கற்றறிந்த தமக்கு யான்யாது புகல்வேன். சகல ஆன்ம கோடிகளுக்கும் தனு, கரண, புவன, போகங்களை அளித்துள்ள எல்லாம் வல்ல இறைவனுக்கன்றோ அவைகளை உபயோகித்தல் வேண்டும். அதனை உணராமல் சதா காலமும், உண்பதும், உறங்குவதும், சுக துக்கங்களை அனுபவிப்பதிலுமேயே நம் அற்பகாலத்தை, அழிப்பதென்றால் நாம் எடுத்த பிறவியின் பயன்தான் என்னே. பிதா! நன்கு யோசியும். இவ்வுடலமோ அல்லது இப்புவனமோ நிலையுள்ளதா? இல்லையே! அப்படியிருக்க அவைகளின் மீது நம்பிக்கை வைப்பது அறிவீன மன்றோ! ஆகவே ஆதியும் அந்தமில்லா சர்வேஸ்வரனிடத்து, மெய் அன்பு கொண்டு அவரைப் பூஜித்து வருதலே, நமக்கு அழகாம்.

தத். போதும்! போதும்!! குழந்தாய்! இவ்விதம் பேச உனக்கு உபதேசித்தவர் யார் — நன்றாக யிருக்கின்றது. புறப்படு.

திண். ஆ! நேரமாகின்றது இதோ புறப்பட்டேன். போய் வாருங்கள்

(வில்லை எடுத்துத் துள்ளி மறைகிறார்.)

தத். ஆ! தெய்வமே!' என் குழந்தையைக் காப்பாற்றும்.

(விழுகிறாள்)

நாக. ஆ! ஆ!! முரட்டுப்பையன் தாய்தந்தையரையே அவமதித்தனன். ஏ காளத்தி நாதா! இதுவோ நின் கருணை! — பெற்றோர்க்கு உதவாப் புதல்வனைப் பிடித்து அடித்தால் தான் என்ன! நாணா! நாம் அத்துஷ்டப் பையனை எவ்விதம் திருப்புவது.

(தத்தையின் முகத்தில் விசிறுதல்.)

நாண. அரசே! இந்த அடவியில் இன்னும் சிலநாள் கஷ்டப் பட்டால் தானே நம் நாட்டை அடைகின்றார்.

நாக. நானும் அவ்விதமே நினைத்தேன். பாவம். சிறிதும் வருத்தமே அறியாத நம் மனைவியை மனம் கலங்கச் செய்தனனே! இவனைச் சீக்கிரமே நமது ஊருக்கு அழைத்தேகவேண்டும்.

நாண. ஆ! அதோ அவர்களே எழுந்திருக்கின்றனர்.

தத். ஆ! என் கண்ணே! திண்ணா! நீ எங்கு இருக்கின்றாய்! பொறு! யானும் வருகின்றேன் உன்னுடன்.

நாக. ஹா! ஹா!! இவள் புத்தி இப்பொழுது மாறுபட்டிருக்கின்றது. இனி இவளை நாம் தந்திரமாக ஊருக்கு அழைத்தேகவேண்டும். பெண்ணே! இனி நீ வருந்த

வேண்டாம். திண்ணன் நம்முடன் வா மலையடிவாரத்திலே நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனும்.

தத். அப்படியா ! புறப்படுங்கள் சீக்கிரம்.

(ஓடுகிறுள்)

நாக. அந்தோ. இனி நாம் யாது செய்வோம்.

(வருந்திச் செல்லல்)

ஒன்பதாம் களம் முடிகிறது.

## களம் 10.

**இடம் :—** சிவகோசரியாரின் ஆசிரமம்.

**காலம் :—** நடுநிசி

நடர் :— சிவகோசரியார், சிவபெருமான்.

[**சிவகோசரியார்** தூக்கத்தில், கனவுகண்டு எழுதல்.]

சி. கோ. சீ ! இது என்ன கனவு ! மனதிற்கு இன்பத்தையும், துன்பத்தையும், மாற்றி மாற்றி அளிக்கின்றது. ஆ ! எப்பொழுது பார்த்தாலும், ஈசனின் திருச்சந்நிதானம் தோன்றுவதும், அதில் யாரோ ஒருவேடுவன் இறைச்சியை எறிவதும் ........ ஆ ! ஆ !! இது என்ன கனவோ ! ஏற்கனவே வருந்தித் தவிக்கும் என்னை இக்கொடிய கனவு இன்னும் துயரக்கடலில் ஆழ்த்துகின்றதே ! — என் பெருமானே ! தம்முடைய திருச்சந்நிதானம் கடந்த

ஐந்து நாட்களாகத் தவறாது அசுத்தம் அடைந்து வருவதை நினைத்தமாத்திரத்தில், நாயேன் அனுபவிக்கும் வேதனை பொறுக்க முடியவில்லையே! என் குறையை யான் யாரிடம் சொல்லி நோவேன். காலனைக் காலால் உதைத்த காலனே! இத்தகைய துஷ்கிருத்தியத்தைச் செய்யும் கொலைபாதகனையும் ஏனோ படைத்தீர்? கைலாசபதே! உமா மகேஸ்வரா! நாளையதினம் உமது திருச் சந்நிதானம் அசுத்தமாக இருப்பதை யான் உயிருடன் காணேன்! காணேன்!!

[பெருமூச்சுடன் மறுபடியும் படுத்துறங்க பக்த போஷகரான உமாமகேஸ்வரர் தோன்றுகிறார்.]

சி. பெ. ஆ! நம் பக்தனை இனியும் வருந்தச் செய்வது அழகல்ல இவன் இனிச் செய்யவேண்டியதைக் கனவின் மூலம் தெரிவித்துச் செல்வோம். உஷக்காலமும் சமீபித்து விட்டது. உத்தம பக்தனே! நின்மனத் துயரத்தை நீக்குவாய். என் சந்நிதியை அசுத்தம் செய்வதாக நீ எண்ணும் பக்தனை அற்ப வேடுவன் என நினையாதே. அவன் மனம் நம் கோயிலாகும். உரைகளெல்லாம் வேதமாகும். செயல்களெல்லாம் அறச் செயல்களாகும். நம் சரீரத்தின் மேல் உன்னால் சூட்டப்பட்ட புஷ்பங்களை நீக்க அவன் நம்மேல் வைக்கும் செருப்புக்காலடிகளை, நம் இளமகன் ஸ்கந்தனுடைய இணையற்ற அன்பான அடிகளாக நாம் கருதுகின்றோம். அவன் நம்மேல் உமிழ்கின்ற நீர், உள்ளிருந்து பெருகிய தலையன்புடன் கலந்திருக்கலால், உத்தம பக்தர்கள் அபிஷேகம் செய்யும் நீரினும் மிகச் சிரேஷ்டமானது என்று எண்ணுகிறோம். மேலும் அவன் தானே சூடிக்கொடுக்கும் மலர்கள், வியாக்கிரபாத முனிவர் முதலியோர் விதிப்படி அருச்சிக்கும் மலர்களைக் காட்டிலும் மிகத் தூயனவாகும். அவன், தன் வாயிலிட்டு முன்னே ஆராய்ந்து எடுக்கப்பட்ட,

முழுச்சுவையும், இளஞ்சூட்டையுமுடைய இறைச்சியை சிறு குழந்தைகளுக்கு இன்சொல் இயம்பி ஊட்டுவதே போல் நமக்கு அளிப்பது, தேவர்கள், ஹோமகுண்டத்திற்கு முறைப்படி அளிக்கும் அவிசையும் தெவிட்டச் செய்கின்றது. தூயவனே! திடங்கொள்வாய். அவன் இயல்பை இன்று உனக்குக் காட்டுகின்றோம். நீ உடனே என் இருப்பிடம் வந்து அவன் அறியாவண்ணம் பக்கத்தில் ஒளித்திருப்பாயாக - யாவும் இனிது முடியும்.

(சிவபெருமான் மறைதல்.)

சி. கோ. [திடுக்கிட்டெழுந்து] ஹா! என் முன் தோன்றி என் மனதிற்கு ஆறுதலையளித்த சிவபெருமான் எங்கே?— சீச்சீ! நான் கண்டது கனவன்றோ — கனவுதான். இல்லையேல் அவரை நான் கண்ணாரக் கண்டு தரிசித்திருக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்க மாட்டேனா! — ஆயினும் நான் கனவில் கண்டகாட்சியும் சொற்களும் என் மனத்தைவிட்டு அகலாது. அந்தோ! பரமசிவன் சந்நிதியை இதுகாறும் அணுகியவரை அறிவீனமாய் மிகவும் இழிவாக வன்றோ கூறினேன். அவ்வன்பரின் குணநிசயங்களைப் பற்றிச் சிவபெருமான் கழறியதை நினைக்க என்மனம் உருகுகின்றதே. என்ன அற்புதம். — அறியாமையும், இரக்கமற்ற குணத்தையும் உடைய ஒரு வேடுவருக்கா சிவபெருமானிடம் அன்பு தோன்றுவது? இது இறைவன் திருவுளமின்றி ஒரு நாளும் நடவாது. அவ்வேடுவர் கொண்ட முறையறியா பக்தியும், அவர் சடுதியில் சிவபிரான் கருணையைப் பெற்றதையும் எவர் பெற்றார்? எவர் பெறுவார்? உயர் குலத்தில் தோன்றி, வேதம் அனைத்தும் கசடறக் கற்றும், சிவபிரானை முறையே ஆராதித்தும், நமக்கு அத்தகைய அருள் கிட்டவில்லையே! ஜாதியில் கடையவன் ஆயினும் ஆண்டவனிடத்தில் மெய்யன்பு கொண்டவர்களுக்கன்றோ அருள் கிட்டுகின்றது.

இந்நாள் இதை உணராமல் அப் பக்தனை பலவாறு இகழ்ந்து கூறினேனே. அந்தோ! இப் பாபத்தை நான் எப்படிப் போக்குவேன் ஆ! காக்கையும் கரைய ஆரம்பிக்கின்றது. இனிப் பொன்முகரிசென்று, நீராடி, சிவ பெருமான் அருளியபடி, அவர் திருச் சந்நிதானத்தில் மறைந்திருந்து, அவ்வேடுவ பக்த சிரோன்மணியின் தரிசனம் பெறுவோம். [சிவஸ்தோத்திரம் செய்து செல்லல்]

பத்தாம் களம் முடிகிறது.

## களம் 11.

**இடம் :—** காளத்தியப்பர் சந்நிதி.

**காலம் :—** காலை

நடர் :— சிவகோசரியார், திண்ணன், சிவபெருமான்.

சி. கோ. [வழக்கம்போல், பூஜைப்பாத்திரங்களுடன் பிரவேசித்து] ஆ! நல்லவேளையாக அவ்வேடுவர் இன்னும் இங்கு வரவில்லை. சிவபெருமான் அருளியபடி, பூஜையைச் சடுதியில் முடித்து, மறைத்துக்கொள்வோம்.

[சீக்கிரமே அருச்சனை புரிந்து ஒரு பக்கலில் மறைய, திண்ணனும் பூஜாபாத்திரங்களுடன் பிரவேசிக்க, கால்கள் தடுமாறி பாத்திரங்களுடன்விழுகிறார். — வாயில் முகந்து வந்த நீரனைத்தும் சிந்த, வருந்துகிறார். எழுந்து]

திண். ஐயோ! இதென்ன! வாய் ஜலமோ தவறியது. கை இறைச்சியோ சிதறியது. தவிர வரும் வழியிலும் பல துர்ச்சகுனங்களையும் கண்டோம். அந்தோ! என் ஆருயிர்த்துணைவர் மிகப்பசியால் வருந்தினாரோ அல்லது கொடிய விலங்குகளினால் பயமடைந்தாரோ (சிதறிய வைகளைச் சேர்த்தபின்) ஸ்வாமி! இதோ வந்தேன். வந்தேன்.

[சிவலிங்கத்தைத் தழுவி முத்தமீயும் சமயம், சிவ பெருமான் வலக் கண்ணில் உதிரம் பெருகுவதைக் காண் கிறார்.]

ஹா! ஹா!! என் இறைவன் கண்ணில் இரத்தம். ஆ பாவி நான் இரக்கமற்றவன். (மார்பில் அடித்து விழுந் தெழுந்து.)

ஐயோ! மந்தபுத்தியுடைய நான் உம்மைத் தனியே விட்டு ஏகினேனே. இப்பொழுது யான் என்ன செய்வேன்! எம்பெருமானே! உமது கண்ணில் உதிரம் வர்வா அதிகமாகப் பெருகுகின்றதே. இந்தவேதனையைத் தாம் எவ்வாறு பொறுக்கின்றீரோ. ஆ! இப்பரிதாபக் க்ாக்ஷியை யான் பார்த்தும் வாளா நிற்கின்றேனே. — இதோ, என் கைகளினால் துடைக்கின்றேன்.

[துடைக்க இரத்தம் இன்னும் அதிகரிக்க.]

நிற்கவில்லையே! ஐயோ என் கண்மணியே! நீர் வருந்த யானோ பார்த்திருப்பேன் — பொறும். எனது கைகளை ஒன்றோடொன்று கூடு பிறக்கத்தேய்த்து கண்ணில் ஒத்துகின்றேன்.

(அவ்விதம் செய்தும் பயனற்றுப்போக.)

என்தாயே! இன்னும் உமது கண் குணமடையவில்லையே.

யான் இனி யாதுசெய்வேன். நான் தம்மைப் பிரிந்ததனால் அன்றோ இத்தீங்கு உம்மை வந்தணுகியது. பாவியேன் ஏனோ பிறந்தேன். ஆ கெட்டேன்! கெட்டேன்!! ஆடையைப் பந்துபோல் சுற்றி வாயால் ஊதி அந்த ஆவியை அப்புவோம்.

(அச்செய்கையும் பயனில்லாமற்போக)

அந்தோ! எனக்குத் தெரிந்த சிகிச்சைகளெல்லாம் பயனற்றனவே. இம்மகத்தான ஆபத்தைத்தடுக்கப் பேதை இனி என்ன செய்வேன். — நந்தியாவட்டை மலர்களின் சாற்றைக் கண்ணில் பிழிந்தால் கண் வியாதி போகு மென்பார்களே! அதையும் செய்து பார்ப்போம். என் அன்பே! அன்பின் உருவே! சற்றுப் பொறும். அருகில் இருக்கும் நல்லமருந்து மலர்களைக் கொண்டு உமக்கு வந்த துன்பத்தைப் போக்குகின்றேன்.

(ஓடி நந்தியாவட்டை மலர்களைக் கொண்டு வருதல்.)

ஈசனே! உமது அதிர்ஷ்ட வசத்தால், போதிய புஷ்பங் களும் அகப்பட்டன. இதுவும் ஒரு நல்ல சகுனமென்றே யான் கருதுகின்றேன்.

(பூக்களைக்கசக்கி, புண் கண்ணில் தடவியும் பயனற)

ஐயோ! ஈதென்ன விதியே! மருந்தைப்பிழிய உதிரம் அதிகரிக்கின்றதே. என் ஐயனே! ஐயனே!! என் செய்வேன்

(தலையிலும் மார்பிலும் அடித்துக்கொள்கிறார்.)

பாவியேன் இத்தகைய பரிதாபமான காக்ஷியைக் காணவோ இந்த ஜென்மம் எடுத்தேன்.

"பாவியேன் கண்ட வண்ணம் பரமனுர்க் கடுத்த தென்னே
ஆவியின் இனிய எங்கள் அத்தனுர்க்கு அடுத்த தென்னே.
மேவினுர் பிரிய மாட்டா விமலனுர்க்கு அடுத்த தென்னே
ஆவதொன் றறிகி லேனே அடியனேன் என்செய் கேனே"

ஹா! குணமணிக் குன்றுகிய தமக்கு உண்டாகிய வியாதி இன்னதென்று அறிய முடியவில்லையே. சகல உயிர்களுக்கும் இனியவரான என் குருநாதனுக்கு அடுத்த தொல்லை யாதெனத் தோன்ற வில்லையே. தேவாதி தேவரே! தேவரீர் திருவருள் வைத்து மெய்க்காரணத்தைத் தெரிவித்தாலல்லாது பாவியேன் யாதும்செய்வேன். ஐயோ! இளம்புதல்வனை அன்னையானவள் கடுங்காட்டின் நடுவே இரக்கமின்றித் தைரியமாய் விடுத்த தன்மையைப்போல், அடியேன் தங்களைக் காவாமல் கைவிட்டு வேட்டைக்குச் சென்றேனே. அந்தோ! நான் செய்த பெரும்பிழைக்கு இதுவோ தண்டனை. கிருபாசமுத்திரமே! எனது உயிர், துணை, வாழ்வு, அன்னை, அப்பன், சர்வமும் நீரே. உமக்குத் தீங்கிழைத்தவர் யாவர்? ஒருக்கால் எனது இனத்தவராகிய வேடுவர்கள், என்னைத்திருப்பத் தமக்குத் தீங்கிழைத்தனரா? அன்றி இவ்வனத்தில் திரிகின்ற விலங்கினங்கள் கொடுமை செய்தனவா? உண்மை உரையும். இன்றே அவர்கள் சென்னியைத் திருகிக் கண்ணைத் தோண்டி உம் கண்ணில் அப்புகின்றேன் —

(சிறிது யோசித்து.)

ஆ! ஆ!! அறிந்தேன்! அறிந்தேன் தக்கமருந்து. பிறர் கண்ணை அப்புவதைக் காட்டிலும் நம் கண்ணை என் பெயர்த்து இடலாகாது — ஆம். ஆம். "ஊனுக்கு ஊனிடலே உசிதமாகும்" என யான் கற்றும் என்ன பயன். அம்முறையும் அனுசரிப்போம். மலையிடை

எனக்கு வாய்த்த என் மாரகதமணியே! செம்பொன் ஒளியே! இப்பொழுதே இக்கூரிய அம்பினுல் என் வலக் கண்ணைப் பெயர்த்து உமது இணையற்ற வலது நேத்திரத் தில் அப்புகின்றேன்.

[களிப்புடன் அவ்விதமே செய்து அப்ப, சிவபெருமான் கண்ணில் உதிரம் நிற்கும் காக்ஷியைக் காண்கின்ருர். மார்பையும் புஜங்களையும் தட்டிக்கொண்டே கடவுளைக் கட்டி யணைக்கிருர், நகைக்கிருர், ஆடிப்பாடுகிருர்.]

பேஷ்! பேஷ்! நான் செய்த செய்கை. நன்று! வெகு நன்று! அந்தோ! இந்த அற்ப மருந்தை அப்பொழுதே அறிந்திருந்தால், என் ஐயன் இந்நேரம் அவதிப் பட்டிருக்க வேண்டியதில்லையே.

(முத்தமளித்து.)

என் ஐயனே! உமது கண்ணிலிருந்து வடியும் இரத்தம் நின்று விட்டது. இனிச் சந்தோஷமாக நான் ஊட்டும் இறைச்சியைப் புசியும். ஐயோ, பசியினுலும் வலியினுலும் நீர் மிகவும் பாடுபட்டீர். எங்கே! வாயைத்திறவும், ஊட்டுகிறேன்.

[இறைச்சியை வாயில் வைக்கும் சமயம் சிவபெருமான் தம் இடக்கண்ணிலும் இரத்தம் சொரியச் செய்கிருர்.]

ஐயோ! இதென்ன மாயம். எம்பிரானின் இடது நேத்திரத்திலும் உதிரம் சொரிகின்றதே. என் குடுமித்தேவருக்கு அடுத்தடுத்துத் துன்பம் உண்டாகின் றதே. ஹா! இக்கொடும் வியாதி இவரைப் பெருந் துன்பத்திற்குள்ளாக்கி வதைக்கின்றதே. நான் இதைப் பார்த்தும் இன்னும் உயிருடன் நிற்கின்றேனே! இதற்கு என்ன மருந்தையிடுவது — அடடா! என்ன பிழை

செய்தேன். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கழுவாரும் உண்டோ. இனி இதற்கு யான் அஞ்சேன்! கைமேல் மருந்து கண்டேன். கணப் பொழுதில் போக்குவேன் இந்நோயை. இன்னே என் இடது கண்ணையும் பெயர்த்து இப்பெருமான் கண்ணில் பதிய வைக்கின்றேன்.

( கண்ணைத்தோண்ட அம்பை வைத்து யோசித்தல் )

ஆ! நாம் இக்கண்ணைப் பெயர்த்து விட்டால், நம் பெருமானது திருக்கண் இருப்பிடத்தை அறிவது கஷ்டமாயிற்றே. இதற்கென்ன செய்வது. சரி, சிவபெருமான் தலைக்குச் சமமாக உள்ள குன்றின் மீதமர்ந்து நம் காலை அவர் உதிரக்கண்ணில் வைத்துக்கொண்டு, பின் நமது கண்ணைத்தோண்டி அப்புவோம்.

[ அவ்விதமே அமர்ந்து அம்பைக் கையிலேந்தி கண் அருகில் கொணர, கருணையங்கடலாகிய சிவபிரான் அச்செய்கைக்கு மனம் பொறாராகி, காக்ஷியளித்து, திண்ணனின் திருக்கையைப் பிடிக்கிறார் — தேவர்கள் புஷ்ப மாரி பொழிகின்றார்கள். ]

சி. பெ. நில்லு! கண்ணப்பா! நில்! நில்! உன் ஆழ்ந்த தலையன்பாற் செய்த செய்கைகளை யாம் பொறுக்க இயலோம். விஜயனே! உன் ஜன்மமும் இன்றே சாபல்யமாயிற்று. இனி நீ நம்மை வணங்கி, நம்முடன் கலந்திடுவாய்.

திண். கண்டேன்! களி கொண்டேன். கலி விண்டேன். இனி வேறொன்றும் வேண்டேன்.

[ கீழேவிழுந்து நமஸ்கரிக்க, அவர் உடலிலிருந்து ஓர் ஜோதி தோன்றி சிவபெருமானிடம் ஒன்று பட, சிவ பெருமான் மறைகின்றார் - மெய்மறந்த சிவகோசரியர் மறைவிடத்திருந்து ஓடிவருகிறார். ]

சி கோ. *பிரும்மானந்தக்காக்ஷி ! ஹே ! பசுபதி! அடியேன் இன்னும் எவ்வளவுகாலம் இவ்வுலக வாழ்க்கையில் வீழ்ந்துகிடப்பது. நெடுங்காலமாக முறைப்படி மாதவம் செய்தும் உம்மை யடையாமல் தத்தளித்து, பரிதவித்து ஏங்கிநிற்க, ஆறு நாட்களுக்குள்ளாக உம்மைப் பூஜித்து வணங்கி உம்முடன் ஐக்கியப்பட்ட ஸ்ரீ கண்ணப்பரின் பக்தியையும் அன்பையும், அடியார்க்கும் அடியவனாகிய சிறியேன் எவ்வாறு புகழவல்லேன் !* (*மும்முறை சுற்றிவணங்கி*) *ஏ ! கைலாஸபதே ! அடியேனையும் அவ்வாறு ஆட்கொள்ளும் நாள் எந்நாளோ ! அருள் புரியவேண்டும்.*

(அசரீரி)

பக்தனே ! நின்துயரம் போக்குவாய். காலம் வரும் பொழுது நின்னையும் இவ்வாறு ஆட்கொள்வோம். அதுவரைப் பொறுத்து நம் பணி செய்து வருவாய்.

சி கோ. *தன்யன். தன்யனானேன்.*

(*கண்களில் நீர்பெருக மீளவும் வீழ்ந்து நமஸ்கரிக்கிறார்.*)

**[ நாடகம் முடிகிறது ]**

ஓம் தத் ஸத் !